**Previous Examination date – 01.11.2023**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 268 of 2018**

**Deposition of Witness P.W.5**

| | |
|---|---|
| **Name : பழனிவேல்** | **Father/Husband's Name : ஆண்டிவேல்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 19.02.2026.**

**A1, A2 absent. 317 Cr.P.C. Petition filed and allowed.**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது ஆயக்குடி காவல்நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கின் விசாரணை அதிகாரி சார்பு ஆய்வாளர் திரு.பொன்னுசாமி அவர்களுடன் பணிபுரிந்துள்ளேன். சார்பு ஆய்வாளர் திரு.பொன்னுசாமி அவர்களின் கையொப்பம் எனக்கு நன்கு தெரியும். திரு.பொன்னுசாமி ஆயக்குடி காவல்நிலையத்தில் கடந்த 10.07.2017ம் தேதி 16.00 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்த போது சகாயராஜ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று விசாரணை செய்து ஆயக்குடி காவல்நிலைய கு.எண்.138/2017 பிரிவுகள் 329,511 இ.த.ச பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். தற்போது என்னிடம் காட்டப்படும் முதல்தகவல்அறிக்கை அவர் தயார் செய்தது தான். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சம்பவயிடம் சென்று சாட்சிகள் சுப்பிரமணி, சண்முகம் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தைப்பார்வையிட்டு பார்வைமகஜர் தயார் செய்து மாதிரிவரைபடம் வரைந்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றும், அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். **பார்வைமகஜர் அ.சா.ஆ.3 மற்றும் மாதிரிவரைபடம் அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு பட்டியல் சாட்சிகள் 1 முதல் 7 வரையிலானவர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். பின்னர் 10.07.2017ம் தேதி 2.00 மணியளவில் கோழிகளை திருட முயற்சி செய்தவரை வாதியின் அம்மாவும், மனைவியும் சத்தம்போட அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் எதிரிகளை சுற்றி வளைத்து

பிடித்தும் எதிரி TN 78 T 4843 TVS XL 100 திருட பயன்படுத்திய வாகனத்தை கைப்பற்றியும் எதிரியுடன் நிலையம் வந்து அத்தாட்சி சாட்சிகள் சுப்பிரமணி, சண்முகம் ஆகியோர் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றியும் பின்னர் எதிரி பன்னீர் செல்வம் தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை 19.00 மணிக்கு சாட்சிகள் சண்முகம், சுப்பிரமணியன் முன்னிலையில் பதிவு செய்தும் பின்னர் தக்க வழி காவலுடன் எதிரிகள் பிரபு, பன்னீர் செல்வம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைக்கப்பட்டார். **படிவம் 91 அ.சா.ஆ.5 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.6 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. எதிரி திருடுவதற்கு பயன்படுத்திய XL புகைப்படம் அ.சா.ஆ.7 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. CD அ.சா.ஆ.8 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு வழக்கின் விசாரணை முடித்து எதிரிகள் மீது பிரிவுகள் 329,511 இ.த.சவின் கீழ் 09.11.2017ம் தேதி குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

2. நான் ஆவணத்தின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். அ.சா.1 கொடுத்த புகாரை முறையாக விசாரிக்காமல் காவல்நிலையத்தில் வைத்து ஆவணங்களை தயார் செய்து பொய்யான குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், எதிரிகள் குற்றமற்றவர் என்று சொன்னால் சரியல்ல. வழக்கில் சொல்லப்பட்டுள்ள வழக்கு சொத்துக்கள் எதிரிகளுக்கு எதிராக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளை சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் கைது செய்யவில்லை என்றாலும், எதிரியின் மீது பொய் வழக்கு போட வேண்டும் என்பதற்காக இவ்வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளார் என்றாலும் சரியல்ல.

M PONPANDI
Digitally signed by M PONPANDI
Date: 2026.02.19 17:56:14 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.